சார்பு நீதிமன் றம், பல்லடம்.

MCOP.No. 188/2022

மனுதாரர் தரப்பு சாட்சி : PW1

பெயர் மற்றும் வயது : வரதராஜன்

தந்தை பெயர் : மாகாளி

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாள் புதன்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை

எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து மூல நிருபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ளது எனது கையெழுத்து தான். நான் சொன்ன விவரங்களை கணினியில் பதிவு செய்து அதனை நான் சரிபார்த்து கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக

1. முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ. 1 ஆகவும்,
2. இறுதி அறிக்கை நனல் ம.சா.ஆ. 2 ஆகவும்,
3. TN 39 R 3592 வாகன ஆய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ. 3 ஆகவும்,
4. TN 39 R 3592 வாகன காப்பீடு அறிக்கை நகல் ம.சா.ஆ.4 ஆகவும்,
5. 1 ம் எதிர்மனுதாரர் செலுத்திய ரசீது ம.சா.ஆ.5 ஆகவும்,
6. காயச்சான்றிதழ் நகல் ம.சா.ஆ. 6 ஆகவும்,
7. பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவ குறிப்பு வா.சா-ஆ. 7 ஆகவும்,

3 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. விபத்து தொடர்பாக நான் புகார் கொடுக்கவில்லை எனது நண்பர் சதாசிவம் தான் கொடுத்தார் என்றால் சரிதான். எனது நண்பர் சதாசிவம் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் நான் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். எனது நண்பரின் அதிவேகத்தாலும் அஜாக்கிரதையாலும் தான் மேற்கூறிய விபத்து நடந்தது எனவே மேற்குறிய விபத்திற்கும் மூன்றாவது எதிர்மனுதாரர்க்கும்

யாதொரு சம்பந்தமும் இல்லை மூன்றாவது எதிர்மனுதாரருக்கு எதிரான இழப்பீடு வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது நண்பர் தான் இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று சாலையின் நடு மத்திய பகுதியில் எந்தவிதமான சமிக்கையும் இல்லாமல் வலது புறம் திரும்ப முற்பட்ட போது தான் நடந்துள்ளது எனவே மேற்குறிய விபத்திற்கு எனது நண்பரின் அஜாக்கிரதை மட்டுமே காரணம் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் தகுதி சான்று இல்லை என்றால் சரியல்ல.

2. எனவே காப்பீட்டு விதிமுறைக்கு முரணாக மேற்படி விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனம் உள்ளதால் மூன்றாவது எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் சிகிச்சை அரச மருத்துவமனையில் தான் எடுத்துக் கொண்டேன் வேறு எந்த விதமான மருத்துவ ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்தில் ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் அனைத்தும் முழுமையாக குணமடைந்து விட்டது வழக்கிற்காக மிகைப்படுத்தி மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாத வருமானத்தை காட்ட எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை எனவே வழக்கத்திற்காக எனது மாத வருமானத்தை மிகைப்படுத்தி காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனமோ அல்லது பணியிழப்போ எதுவும் இல்லை எனவே அதன் அடிப்படையிலேயே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் காப்பீட்டு விதிமீறல் உள்ளதால் மூன்றாவது ஒரு மனுதாரருக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தெரியவில்லை

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரதுகையெழுத்து பெறப்பட்டது.

(Sd/-)K.Yuvaraj,.B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.